# நவமலர்







வெளியீடு
இந்து இளைஞர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.
2018




உ

சிவமயம்



# நவமலர்

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**இந்து இளைஞர் கழகம்,**
**வருடாந்த நவராத்திரி வெளியீடு**

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 02 ஆம் நாள்**
**19.10.2018**

உ
சிவமயம்

## ஸ்தாபகர் கீதம்

இராகம் : லதாங்கி

நாவலரின் சிந்தனையை மனத்துள் வாங்கி
பசுபதியார் நாகலிங்கம் இணைவின் பெயரால்
வையகமே புகழ்ந்திடவே வளர்க என்று
வைத்து பெரும் கற்களால் உருவானதே எங்கள் இந்து

பாடல் ஆக்கம் :
திரு. பொ. ஞானதேசிகன்

இசையமைப்பு :
திரு. கி. பத்மநாதன்
இசை ஆசிரியர்

## மகுட வாக்கியம் (Motto)

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

## இந்துவின் நோக்கக் கூற்று (Vision)

அறமும் அறிவாற்றலும் ஆளுமையும் மிக்க இந்துப் பண்பாட்டுச் சமூகத்தை கட்டியெழுப்புதல்

Building up an Ethically, Literally and Virtuously Bound Hindu Traditional Society

## இந்துவின் பணிக் கூற்று (Mission)

சர்வதேச மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் தேர்ச்சியும் செயல்திறனும் சுதேசியப் பற்றும் கொண்ட நற்பிரஜைகளை இந்துப் பண்பாட்டு வழியாக உருவாக்குதல்

Producing well Disciplined Citizens Possessing Necessary Skills, Competence, Humanity and Patriotism required to copy with Universal Changes, Bound Hindu Traditional Society



ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர் பவதுமே ஸதா

-இந்து இளைஞர் கழகம்-
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உ
சிவஞான வைரவர் துணை



# யாழ் இந்துக் கல்லூரி
# சிவஞான எழுந்தருளி வைரவர்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# இந்து இளைஞர் கழகம்
## செயற்குழு – 2018

**புரவலர்** – திரு. ச. நிமலன் (அதிபர்)

**துணைப்புரவலர்** – திரு. சு. பரமேஸ்வரன்

**பெருந்தலைவர்** – திரு ச. அகிலன் (ஆசிரியர்)

**பெருச் செயலாளர்** – திரு. தி. சிவகுமாரன் (ஆசிரியர்)

**பெரும் பொருளாளர்** – திரு. சி. ஜீவகநாதன் (ஆசிரியர்)

ஆசிரியர்கள் - திருமதி.ம.செல்வரத்தினம்
செல்வி.அ.காயத்திரி

**தலைவர்** – செல்வன் க. வாகீசன்

**செயலாளர்** – செல்வன் ப. பவதாரகன்

**பொருளாளர்** – செல்வன் ச. அர்பிந்தா

**உப தலைவர்** – செல்வன் த. ஜீவசாந்

**உப செயலாளர்** – செல்வன் ம. ஹரிகரன்

**விழா அமைப்பாளர்** – செல்வன் சி. ரவிராஜ்
– செல்வன் ந. கிருஷ்ணராஜ்
– செல்வன் விதுஜனன்

**பத்திராதிபர்** – செல்வன் மோ. திவ்வியகரன்

# ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மிக நீண்ட வரலாற்றைக் கொண்டு விளங்கும் பாடசாலை. இந்தக் கல்லூரி இந்து சமயத்தையும் தமிழையும் இரண்டு கண்களாக போற்றி வருகின்றது. இளைய சமூகத்து நல்வழியை சிறப்பாக வழிப்படுத்தி வருகின்றது. இந்து இளைஞர் கழகம் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது என்றால் அது மிகையாகாது. நவராத்திரி காலத்தில் வருடந்தோறும் நவமலர் எனும் நூல் வெளியிடப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். இந்நூல் சிறப்பாக இறைவன் தாழ் பணிகிறேன். மேலும் இந்து இளைஞர் கழகத்தின் நவமலர் தொடர்ந்து வெளிவர இறைவனின் நல்லாசி கூறி அமைகிறேன்.

தொண்டர் பணி சிறக்க ஞானவைரவர்
பாதம் பணிகின்றேன்

**பிரம்மஸ்ரீ க. நிரஞ்சனசர்மா**
ஆலய நித்திய சிவாச்சாரியார்
சிவஞான வைரவர் ஆலயம்,
யாழ். இந்துக் கல்லூரி.

# அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இளைஞர் கழகத்தினால் ஆண்டுதோறும் விஜயதசமி நன் நாளையொட்டி "நவமலர்" என்ற நாமம் தாங்கிய சிறப்பு மலர் வெளியிடப்படுவதையிட்டு வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன்

அன்பு, பொறுமை, சாந்தி, சமாதானம், கருணை போன்ற நற்பண்புகள் மனிதகுலத்தை வளம்பெறச் செய்யும் உயர் சக்திகளாகும். ஆனால் அவற்றை விலை கொடுத்து வாங்க இயலாது. ஏனெனில் அவை மனிதனின் புறத்தே அல்லாது அவனது அகத்தேயே உள்ளன. அகத்தே உள்ள அச்சக்திகளை வெளிப்படுத்த வழிகாட்டுதலே சமயத்தின் நோக்கமாகும். இதைத்தான் "உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே" என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். எமது சமயத்தின்உயர்ந்த விழுமியக் கருத்துக்கள் மாணவர்களைச் சென்றடைந்து அவர்களது வாழ்க்கை வளம்பெற உதவும் வகையில் இம் மலர் நல்வழியில் பயணிப்பதற்கு திசைமுகப்படுத்தும் பயன்மிகு பணியினை ஆற்றுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இது இந்து இளைஞர் கழகத்தின் வினைத்திறன் மிகு செயற்பாட்டின் இன்னொரு பரிமாணமாகும். இப்பணியில் முன்னின்று உழைத்த இந்து இளைஞர் கழகத்தினரை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

**திரு. ச. நிமலன்**
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் போற்ற ஆறுமுக நாவலர் பெருமானாரின் சிந்தனையில் உதித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பெருமையினை காக்கும் பணியில் தனது பங்கினைச் சிறப்புறச் செய்து தடம்பதித்து வரும் இந்து இளைஞர் மன்றத்தின் செயற்றிறனை வெளிப்படுத்தும் வெளியீடான நவமலர் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

பாடசாலையின் கற்றல் செய்பாடுகள் மட்டுமே தனி மனித ஆளுமையை விருத்தியடையச் செய்யப் போதுமானது அல்ல. வேலைப்பழுக்களைச் சுமக்கும் ஆசிரியர்குழாம் தமது மாணவர்களின் பண்பாட்டு கலாச்சார விழுமியங்களை மேலோங்கச் செய்வதில் பெரும் பங்களிப்பை ஆற்றிவருகின்றனர். மன்றச் செய்பாடுகளும், படைப்பாற்றலை விருத்தி செய்யும் நவமலர் சஞ்சிகை வெளியீடும் மாணவர் சமுதாயத்தை நல்ல வழியில் பயணிக்க உதவும். இச் செயற்பாடுகள் மேலும் மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**திரு. சு. பரமேஸ்வரன்**
பிரதி அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# பெருந்தலைவரின் உள்ளத்திலிருந்து



யாழ். இந்துக் கல்லூரியின் பாரம்பரிய பண்பாடு விழுமியச் செயற்பாடுகளின் வெளிப்பாடாகவும் ஆசிரியர்கள், மாணவர்களின் கல்லூரி வாழ்வின் வரலாற்று ஆவணப் பதிவாகவும் "நவமலர்" விளங்குகின்றது.

இந்து இளைஞர் கழகத்தின் செயற்பாட்டில் நவமலர் வெளியீட்டில் உந்து சக்தியாக இருந்து எம்மை ஊக்குவித்த எமது கல்லூரியின் அதிபர் உயர்திரு. ச. நிமலன் அவர்களுக்கு எமது கழகம் என்றும் நன்றிப் பெருக்குடையது.

இந்து இளைஞர் கழகத்திற்கு எந்த வேளையிலும் உறுதுணையாக பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் முன்னைய காலப் பகுதியில் கல்லூரியில் சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அவர்களுக்கும் இந்து இளைஞர் கழகத்தின் நன்றியினைத் தெரிவித்து இவ் நவமலர் தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானின் இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. ச. அகிலன்**
பெருந்தலைவர்
இந்து இளைஞர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# தலைவரின் இதயத்திலிருந்து



கல்வியுலகில் பல பெருமைமிகு சாதனைகளை தடம் பதித்த எமது இந்துக் கல்லூரித் தாயின் கரங்களில் ஆண்டுதோறும் தவழ்ந்துவரும் விஜயதசமி வெளியீடான "நவமலர்" இம்முறையும் மலர்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சமயத்தின் உன்னதமான கருத்துக்களைக் கூறுவதே இம்மலரின் நோக்கமாகும். அந்த வகையில் 2018 இல் எமது கழகத்தினரால் நேசக்கரங்களை பற்றியபடி முனைப்போடு இவ் நவமலர் உங்கள் கரங்களில் தவழவிடப் பட்டிருக்கின்றது.

இந்து மதம் கூறும் அடிப்படைத் தத்துவத்தின் பிரகாரம் எம்மை நாம் முழுமையாக இறைவனிடம் ஒப்புவித்து அவனை அனுதினம் வழிபட்டு மன ஆசைகளை அகற்றுவோமானால் அகமகிழ்ச்சி, மன அமைதி, சுக வாழ்வு ஆகியவை வளர்த்து பிறவிப் பெருங்கடலைக் கடக்கக்கூடிய பக்குவம் எமக்கு ஏற்படுவது திண்ணம்.

அந்த வகையில் தரம்மிக்க பல கருத்துக்களை உள்ளிட்ட ஆக்கங்களை தாங்கி வெளிவந்து மணம் பரப்பும் நவமலரை அனைவரும் படித்து மன அமைதி பெறவேண்டுமென்பதே எமது அவாவாகும்.

**செல்வன் க. வாகீசன்**
தலைவர்
இந்து இளைஞர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# இந்து இளைஞர் கழக நிர்வாகக்குழு



# இந்து இளைஞர் கழக செயற்குழு



# இந்து இளைஞர் கழக உறுப்பினர்கள்



# இந்து இளைஞர் கழக உறுப்பினர்கள்







# பஞ்சபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றினை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

**தேவாரம்**

தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண் பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
நுழை தரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை அமர்ந்தாரே.

**திருவாசகம்**

மெய்தான் அரும்பி விதர் விதாத் துன்விரை
யார் கழற் கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றி யென்னும்
கைதான்நெகிழ விடேன்உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே.

**திருவிசைப்பா**

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற எறிந்தெழுந்து
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ

அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமை
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்கு சக்கரமன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிற்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுஉன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்முறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



### திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை யிலும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மணிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்
கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பிக் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாரமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து



# சரஸ்வதியந்தாதி

## காப்பு

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

# சகலகலாவல்லி மாலை

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.

3. அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கம் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவிநின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

5. பஞ்சப்பி தந்தரு செய்யபொற் பாதபங் சேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநெல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

8. சொல்லிற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.



# கௌரிக் காப்புத் தோத்திரம்

**தேவி துணை**
**ஓம் சக்தி ஓம்**

காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

**வேண்டுதற் கூறு**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே

வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்

சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

ஓம் சக்தி ஓம்

❀❀❀

# 2018ம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்









# 2018ம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்










# ஸ்ரீ லிங்காஷ்டகம்



ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹும் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்திபிரவேச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

அஷ்ட தளேபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

# ஸ்லோகம்

**ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி**
**வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர் பவதுமே ஸதா**

# சரஸ்வதி துதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்திள் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் - வெள்ளை

# தேவி ஸ்தோத்திரம்

ஜய ஸுகந்தினீம் த்ரிபுர சுந்தரீம் ஜய மகேஜ்வரீம் ஜய ஜனப்பிரியே
ஜய ஸுநர்த்தனீம் ஜகத் பராம்பிகே மஹிஷ மர்த்தனீம் தேவி மாஸ்ரயே
சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி

அயி பராசக்தி அம்ப பாலிகே ஹரி மனோகரீம் ஹார பூஷணீம்
அயி சுபாஷிணீம் ஆதி நாயகீம் ஜய மஹாலக்ஷ்மீம் தேவி மாஸ்ரயே
சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி

சசிகலாத்ரீம் ஸாரதாம்பிகே ஸர்வரூபிணீம் ஹம்ஸ வாஹினீம்
ஜய சரஸ்வதீம் தேவி மாஸ்ரயே சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி
சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி

ஜய ஜகத்ப்ரியம் ஜோதி நிர்மலம்ஜய சிவப்ரியம் ஸுந்தரானனம்
ஜதி ஸுலோசனம் ஸிம்ம வாஹினீம்த்ரிபுர ஸுந்தரீம் தேவி மாஸ்ரயே

சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரிசரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி
சரணமீஸ்வரி தேவி சரணமீஸ்வரி சரணமீஸ்வரி..... சரணமீஸ்வரி......

# தேவியின் திருநாம அர்ச்சனை (108)

போற்றியோம் ஈஸ்வரி பார்வதி கௌரி
பொன்னடி போற்றினோம் புதுமலர் தூவி
நாற்றிசையும் புகழ் வீரமும் திருவும்
நற்கலை ஞானமும் நாயகி அருள்வாய்
தோற்றமும் முடிவுமில் சச்சிதானந்த
சொரூபமே எல்லையில் சோதியே தாயே
ஏற்றெமைக் காத்திட எங்கும் நிறைந்தாய்
எம்மகத்தே அன்பாய் எழுந்தருளாயே.

அம்ம ணி! ஜக தம்பி கே! கருணாக ரீ! பர மேஸ்வரீ
கண்ம ணி! ஜெய கௌரி, காங்கயிகார்த்தி கே! திரி நேத்திரி!
தண்ம யீ! உப சாந்தி னி! சிவ சாம்ப வீ ஏ காம்பரீ!
சின்ம யீ சுப சீலி, மாலினி, தேவி, சௌந்தரீ, ஓம்நமோ!

பத்ர காளி, துர்க் கா, ப வானி, பராசக் தீ! பரி பாலினி!
சித்சொ ஷரூபிணி, சிம்ம வாகினி, திவ்ய ராஜரா ஜேஸ்வரி!
வித்வ பூஷணி, மீன லோசனி, வீர மர்த்தனி, விமலினி,
சத்ய வாசனி, நித்ய கன்னி, தயாப ரீ! நம, ஓம்நமோ!

குண்ட லீ சந்த்ர மண்ட லீ! இளங் கோமளி இன்ப ஸ்யாமளி
சண்டி கா, சா முண்டி, பைரவி சாவித் ரீ! ஜெப காயத்ரி!
அண்டர் நாயகி, ஆபத் பாந்தவி, அமுத ஞானப யோதரீ!
தொண்டர் சாதகி, தூய வானதி, சோம சேகரி, ஓம்நமோ!

சுத்த சக்தி, சுடர்க்கொ டீ! திவ்ய சுந்த ரீ, பூரீபு ரந்தரீ!
வித்த கீ தெய்வ நர்த்த கீ ஜய விஜயி, பாபவி நாசினி,
சித்த ரஞ்சனி, தெய்வ குஞ்சரி, தேவ தா, உமா, பார்வதீ!
நித்ய வாணி, நிரஞ்ச னி மலை நீலி, சங்கரி, ஓம்நமோ!

சந்த்ர மௌளி, சரஸ்வ தீ! திவ்ய சார தா! ஜய பாரதீ,
சுந்த ராங்கி, சுரநு தாவிஸ்வ, சோபி தா, சம்ப்ர பாவதீ!
மந்த்ர ரூபிணி, மாப கவதி, மாஹி ஷாசுர மர்த்தனி!
தந்த்ர சாதனி, செஞ்ச டாதரி, சர்வ தாரகி, ஓம்நமோ!

அஷ்ட லட்சுமி, அபய ஹஸ்தனி, அமலி னி! செங் கமலினி
நிஷ்டை யோகினி, நிமல வாகினி நிஷ்க ளங்கசந் யாசினி!
துஷ்ட நிக்ரஹி, தூய வைஷ்ணவி, ஜோதி வேணி, சுமங்கலீ!
சிஷ்ட ரட்சகி, ஸ்ரீவராகினி, சீதளீ நம ஓம்நமோ!

பூர ணீ! ஞான பூஷ ணீ! வேத போதி னீ தர்ம சாதனி!
ஆர ணீ! நவ சீர ணீ! உல காண்ட வீ! உக்ர தாண்டவீ!
கார ணி! சிவ காமி னீ! ஜீவ காரு ணீ! ஜகன் மோகினி!
நாரணி பவ தார ணி! புவி நாய கீ! நம ஓம்நமோ!

## ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
துர்க்கையம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் போகும் சர்வமங்களம் கூடும்
(ஜெய ஜெய தேவி)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றிவரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டு வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே ஆதி சக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய் போல் நம்மை காப்பவளே
(ஜெய ஜெய தேவி)

சங்கு சக்கரமும் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலும் சூலமும்
தாங்க கைகளில் தாங்கி நிற்பாள் அம்மா.....
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள் திங்களை முடிமேல் சூடி நிற்பாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள் மங்கையர்கரசியும்
அவளே அங்கையர்க்கண்ணியும் அவளே

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்

# ஸ்ரீ மஹிஷாஸுர மர்த்தினி ஸ்தோத்திரம்

அயிகிரி நந்தினி நந்தித மேதினி விஸ்வவிநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி - நிவாஸினி விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதி கண்ட குடும்பினி பூரி குடும்பினி பூரி க்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி ரம்ய கபர்தினி ஷைலஸுதே

ஸுரவரவர்ஷினி துர்தரதர்ஷினி துர்முகமர்ஷினி ஹர்ஷரதே
த்ரிபுவனபோஷினி சங்கர - தோஷினி கில்பிஷமோஷினி கோஷரதே
தனுஜ நிரோஷினி திதிசுத ரோஷினி துர்மத சோஷினி சிந்துஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி ரம்ய கபர்தினி ஷைலஸுதே

அயி ஜகதம்ப மதம்ப கதம்ப வனப்ரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய ஸ்ருங்க நிஜாலய மத்யகதே
மது மதுரே மது கைடப கஞ்சினி கைடப பஞ்சினி ரா ஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி ரம்ய கபர்தினி ஷைலஸுதே

அயி சதகண்ட விகண்டித ருண்ட விதுண்டித சுண்ட கஜாதிபதே
ரிபு கஜ கண்ட விதாரண சண்ட பராக்கிரம சுண்ட ம்ருகாதிபதே
நிஜ புஜ தண்ட நிபாதித கண்ட முண்ட படாதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி ரம்ய கபர்தினி ஷைலஸுதே



# துக்க நிவாரண அஷ்டகம்

1. மங்கள ரூபிணி மதி அணி சூலினி மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே!
கங்கண பாணியன் கனிமுகம் கண்டநல் கற்பகக் காமினியே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

2. கானுறு மலரெனக் கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவ ஒளி தாரொளி மதி ஒளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள், மாதவர் மொழியாள், மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

3. சங்கரி! சௌந்தரி! சதுர்முகன் போற்றிடச்சபையினில் வந்தவளே!
பொங்கு அரிமாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே!
எம்குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்த நல் துர்க்கையளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

4. தணதண தந்தண தவிலொளி முழங்கிடத் தண்மணி நீவருவாய்
கணகண கங்கண கதிரொளி வீசிடக் கண்மணி நீவருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீவருவாய்
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

5. பஞ்சமி, பைரவி, பர்வத புத்திரி, பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேலனைக் கொடுத்த நல் குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நல் சக்தி எனும் மாயே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

6. எண்ணியபடி நீ அருளிட வருவாய் எம்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

7. இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

8. ஜெய ஜெய பாலா! சாமுண்டேஸ்வரி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய துர்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய ஜெயந்தி! மங்களகாளி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி! துக்க நிவாராணி காமாட்ஷி!

# அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம்

## ஆதி லக்ஷ்மி

ஸுமநஸ வந்தித ஸுந்தரி மாதவி சந்த்ர சகோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷ ப்ரதாயினி மஞ்சுள பாக்ஷினி வேதநுதே/
பங்கஜ வாஸினி தேவஸுபூஜித ஸத்குண வர்க்ஷிணி சாந்தியுதே
ஜய ஜய ஹே மது சூதன காமிநி ஆதி லக்ஷ்மி ஸதா பாலயமாம் //

## தான்ய லக்ஷ்மி

அயிகலி கல்மஷ நாசினி காமிநி வைதிக ஷரூபிணி வேதமயே
க்ஷீரசமுத்பவ மங்கள ஷரூபிணி மந்த்ர நிவாசிநி மந்த்ர நுதே/
மங்கள தாயிநி அம்புஜ வாசிநி தேவ கணாச்ரித பாதயுதே
ஜய ஜய ஹே மது சூதன காமிநி தான்யா லக்ஷ்மி ஸதா பாலயமாம் //

## தைர்ய லக்ஷ்மி

ஜெயவர வர்ணனி வைஷ்ணவி பார்கவி மந்த்ர ஸ்வஷரூபிணி
- மந்த்ரமயே
ஸுரகண பூஜித சீக்ர பலப்ரத ஜ்ஞான விகாசினி சாஸ் த்ரநுதே /
பவபய ஹாரிணி பாப விமோசநி சாது ஜநாச்ரித பாதயுதே
ஜய ஜய ஹே மது சூதன காமிநி தைர்ய லக்ஷ்மி ஸதா பாலயமாம்//

## கஜ லக்ஷ்மி

ஜெய ஜெய துர்கதி நாசினி காமிநி ஸர்வ பலப்ரத சாஸ்த்ரமயே
ரதகஜ துரக பதாதி ஸமாவ்ருத பரி ஜன மண்டித லோகநுதே/
ஹரி ஹர ப்ரும்ம ஸுபூஜி சேவித தாப நிவாரிணி பாதயுதே
ஜய ஜய ஹே மது சூதன காமிநி கெஜ லக்ஷ்மி ஷரூபிணி பாலயமாம் //

## சந்தான லக்ஷ்மி

அயிகக வாஹிநி மோஹிநி சக்ரிணி ராக விவர்த்திநி ஜ்ஞானமயே
குணகண வாரிதி லோக ஹிதைஷிணி ஸ்வரஸப்த பூஷித கானநுதே/
ஸகல ஸுரா ஸுர தேவ முநீச்வர மாநவ வந்தித பாதயுதே
ஜய ஜய ஹே மது சூதன காமிநி ஸந்தான லக்ஷ்மீது பாலயமாம் //

## விஜய லக்ஷ்மி

ஜய கமாலாஸநி ஸத்கதி தாயிநி ஞான விகாசிநி கானமயே
அநுதின மர்ச்சித குங்கும தூஸர பூஷிந வாசித வாத்ய நுதே /
கனகதாரா ஸ்துதி வைபவ வந்தித சங்கர தேசிக மான்யபதே
ஜய ஜய ஹே மது சூதன காமிநி விஜய லக்ஷ்மி ஸதா பாலயமாம் //

## வித்யா லக்ஷ்மி

ப்ரணத ஸுரேச்வரி பாரதி பார்க்கவி சோக விநாசிநி ரத்னமயே
மணிமய பூஷித கர்ண வீபூஷன சாந்தி ஸமாவ்ரத ஹாஸ்ய முகே /
நவநிதி நாயிநி கவிமல ஹாரிணி காமித பலப்ரத ஹஸ்தயுதே
ஜய ஜய ஹே மதுசூதன காமிநி வித்யா லக்ஷ்மீ ஸதா பாலயமாம் //

## தன லக்ஷ்மி

திமி திமி திந்திமி திந்திமி திந்திமி திந்திமி துந்துபி நாத ஸுபூர்ணமயே
கும கும குங்கும குங்கும குங்கும சங்கநி நாத ஸ்வாத்ய நுதே /
வேத புராணே திஹாஸ ஸுபூஜித வைதிக மார்க்க ப்ரதர்சயுதே
ஜய ஜய ஹே மதுசூதன காமிநி தன லக்ஷ்மீ ஷரூபிணி பாலயமாம் //

# அம்பிகை கீர்த்தனை

ஸ்ரீ சக்கர ராஜ ஸிம்ஹாஸனேஸ்வரி
ஸ்ரீ லலிதாம் பிகையே புவனேஸ்வரி
ஆகம  வேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோஹரி
ஞான விக்னேஸ்வரி ராஜ ராஜேஸ்வரி   (ஸ்ரீ சக்ர)

பலவிதமாய் உன்னை பாடவும் ஆடவும்
பாடிக் கொண்டாடும் அன்பர் பதமலர் சூடவும்
உலகம் மழுவதும் எந்தன் அகத்துள்ளே காணவும்
ஒருநிலை தருவாய் காஞ்சிகாமேஸ்வரி  (ஸ்ரீ சக்ர)

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிட கூட்டி வைத்தாய்
நிழலென தொடர்ந்த முன்னோர் கொடுமையை நீங்கச் செய்தாய்
நித்யகல்யாணி பவானி பத்மேஸ்வரி  (ஸ்ரீ சக்ர)

துன்பப்புடத்திலிட்டு தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்த உன்மாயம் நீக்கி பிறந்த பயனைத்தந்தாய்
அன்பைப் புகட்டி உந்தன் ஆடலைக் காணச் செய்தாய்
அடைக்கலம் நீயே அம்மா அகிலாண் டேஸ்வரி  (ஸ்ரீ சக்ர)



# ரோக நிவாரண அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி பலமிகு தேவி துர்கையளே
ஜகமது யாவும் ஜயஜயவெனவே சங்கரி உன்னைப் பாடிடுமே
ஹநஹந தகதக பசபச வெனவே தளிர்த்திடு ஜோதியானவளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (01)

தண்டினி தேவி தக்ஷினி தேவி கட்கினி தேவி துர்கையளே
தந்தன தான தனதன தான தாண்டவ நடன ஈஸ்வரியே
முந்தினி தேவி முனையோலி சூலி முனிவர்கள் தேவி மணித்தேவி
ரோக நிவாரிணி சோக நிவாரிணி தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (02)

காளினி நீயே காமினி நீயே கார்த்திகை நீயே துர்கையளே
நீலினி நீயே நீதினி நீயே நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே மாதவி நீயே மான் விழியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (03)

நாரணி மாயே நான்முகன் தாயே நாகினி யாயே துர்கையளே
ஊரணி மாயே ஊர்ருத்தாயே ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே காணக யாயே காசினியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (04)

திருமகளானாய் கலைமகளானாய் மலைமகளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய் பெருவலி வானாய் பெண்மையளே
நறுமலரானாய் நல்லவளானாய் நந்தினி யானாய் நங்கையளே
ரோக நிவாரணி சோக நிவாரணி தாப நிவாரணி ஜெய துர்க்கா. ....... (05)

வேதமும் நீயே வேதியள் நீயே வேகமும் நீயே துர்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே மானமும் நீயே மாயவளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (06)

கோவுரை ஜோதி கோமள ஜோதி கோமதி ஜோதி துர்கையளே
நாவுரை ஜோதி நாற்றிசை ஜோதி நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுரை ஜோதி பூரண ஜோதி பூத்தனர் ஜோதி பூரணியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (07)

ஜய ஜய சைல புத்திரி ப்ரஹ்ம சாரிணி சந்திர கண்டினியே
ஜய ஜய கூஷ்மா மனதினி ஸ்கந்த மாதினி காத்யாயன்ய யளே
ஜய ஜய காலராத்திரி கௌரி ஸித்திதா ஸ்ரீ நவ துர்க்கையளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி தாப நிவாரிணி ஜெயா துர்கா. ....... (08)

# ஆராத்திப் பாடல்

ஓம் ஜெய, ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம், பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம்....

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்கத்
தேவையெல்லாம் அடைய
அம்மம்மா தேவையெல்லாம் அடைய
பக்தி பெருகிடப் பாடியுருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம்....

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரம் அருள்வாய்
அம்மம்மா ஈஸ்வரி வரம் அருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம்...

காசின் எங்கும் வேற்றுமைபோக
கருத்தினுள் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினுள் அன்பருள்வாய்
தேசுடன் வாழவழி காட்டிடுவாய் ரஸ
தேவியுடன் ததிப்போம். - ஓம்....

நமஸ்காரம் கூறிக் கருத்தினில் ஞான
நல்லொளி தீபம்வைத்து
ஞான நல்லொளி தீபம்வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்திசெய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ....

# மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை
அன்பினிற்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற் சபைக்கு மங்களம்

தாழ்வில்லாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும் என் வாக்கிலே வரங்களும்
பக்தியில் கசிந்துருகி பாடுகின்ற பாண்மையும்
பாடுவோருக்கு ஞான போக பாக்கியங்கள் மேன்மையும்

என்றும் ஓங்க என் கரத்து இயற்கையான சக்தியை
தந்து ஞான மூர்த்தியாய் தனித்து வைத்த சக்தியாம்
நாம கீர்த்தனம் பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெல்லாம் விளங்கவும்

ஞான தீபமேற்றி என்றும் நாம கீதம் பாடுவோம்
தர்ம சக்தி வாழ்கவென்று சந்தகம் கொண்டாடுவோம்

# மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம்-தத்தாத்ரேயாய மங்களம்
கஜானனாய மங்களம்-ஷடானனாய மங்களம்
ரகுவராய மங்களம்-வேணுகிருஷ்ண மங்களம்
ஸீதாராம மங்களம்-ராதாகிருஷ்ண மங்களம்
சிவானந்தாய மங்களம் சற்குருப்யோ மங்களம்
சர்வ நாமரூப சர்வேஸ்வராய மங்களம்

# இந்து மதம்

" ஓர் சமூகமானது முன்னேற்றகரமான ஒரு சமூகமாக விளங்குவதற்கு பல அடிப்படை காரணிகள் பங்களிப்பு செலுத்துகின்றன. அதாவது குறிப்பாகச் சொல்வது என்னால் அந்த சமூகத்திலே வாழக்கூடிய மனிதர்களின் மதங்கள் அவர்கள் அந்தக் கிராமத்தை நல்லதொரு நகரமாக மாற்றுவதற்கு பங்காற்றுகின்றது."

அதனை அடிப்படையாகக் கொண்டு என்னுடைய மதமான இந்து மதத்தின் சிறப்புக்கள் பற்றியும், எமது மதம் இளையவர்கள் மத்தியிலே எவ்வாறு விரிவடைந்துள்ளது எனவும் என்னுடைய பார்வை யில் தோன்றியதை எழுது முனையில் நவமலரில் பதிவிடுகின்றேன்.

எங்களுடைய இந்துமதம் ஆனது ஓர் சமுத்திரம் அல்லது ஓர் சரித்திரமாகக் காணப்படுகிறது. ஏனென்றால் இந்து மதத்தவர்களாகிய நாங்கள் பல பண்டிகைகளை கொண்டாடுகின்றோம். தைப்பொங்கல், நவராத்திரி, விஜயதசமி, சதுர்த்தி, தீபாவளி என்று பல பண்டிகைகளை சிறப்பிக்கின்றோம். ஆதலால்தான் இந்து மதத்தை சமுத்திரத்திற்கு உருவகித்துள்ளேன். அதைவிட சமுத்திரத்தினுடைய ஆழம் அதனுடைய அகல பரிமாணங்கள் இதுவரைக்கும் கண்டறியப்பட வில்லை. இதேபோலத்தான் மதத்தின் தொண்மை, பழமை, தோற்றமும் யாராலும் கண்டறியப்படவில்லை. இப்படி இருந்தாலும் எங்களுடைய மதம் நம்பிக்கையான அர்த்தமுள்ள பேற்றினை சைவர்கள் மத்தியிலே தோற்றுவித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

அதே தருணம் எங்களுடைய மதத்தை யாரும் அறிவிக்கவும் இல்லை, உருவாக்கவும் இல்லை என்று பல இந்துமத நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. ஆதலால்தான் முன்னோர்கள் இந்து மதத்தை "சனாதன தர்மம்" என்று அழைத்தார்கள். எப்பொழுது ஆரம்பித்தது என்று தெரியாது. கால அளவைக் கடந்து உலகத்தை நெறிமுனைகளின் அடிப்படையைக் கொண்டு தாங்கும் தன்மை இந்து மதத்திற்கு உண்டு என்பதை இந்து மதத்தவராகிய நாம் அறிந்திருக்கின்றோம்.

இவ்வாறு பழமையும், பெருமையும் வாய்ந்த எமது மதம் பற்றி சான்றோர்கள் எத்தனையோ விதமான கருத்துக்களை மதம் சார்ந்து

குறிப்பிட்டிருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தர் பேசியபோது சொன்னார், மாண்பையும், மரபையும் பற்றிக் கூறியதைக் கண்டு உலகமே அதிசயத்து நின்றது. அதேபோல இராமகிருஸ்ண பரமாச்சாரியார் , மகாத்மா காந்தி, திருமுருக கிருபானந்தவாரியார், சுவாமி சின்மயானந்தர், கவியரசர் கண்ணதாசன் இப்படி பலபேர் எங்களுடைய இந்து மதத்திற்காக உழைத்தார்கள். இவர்கள் எல்லாம் போற்றுதலுக்குரியவர்கள்.

தற்காலத்திலேயும் எங்களுக்க முன்னாலே எமது மண்ணிலே எமக்கு நெருங்கிய உறவுப் பாலம் அமைத்தவர்களும் இற்றைக்கு குறிப்பிடத்தக்கவர்கள் நல்லைக் குருமணி, கம்பவாதிரி, கலாநிதி ஆறு திருமுருகன், சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் இவ்வாறு பலபேர் எமது மண்ணிலே பிறந்து வளர்ந்து சைவத்தை வளர்க்க தம்மையே அர்ப்பணிக்கிறார்கள். அண்மையிலே யாழ்ப்பாண நகர நுழைவாயிலாக தலைசிறந்து விளங்குகின்ற நாவற்குழி பிரதேசத்திலே ஏக்கர் பரப்பிலே காணி வாங்கி கருங்கல்லிலே திருவாசங்களைப் பொறித்த பெருமை கலாநிதி ஆறுதிருமுருகன் ஐயாவுக்கே உடையது. எமது இளைய தலைமுறைக்கு திருவாசகம் தெரியவேண்டும், எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் அழியாது இருக்கவேண்டும் என்று எம்மவருக்காக உருவான அரண்மனை அது. இப்படி சைவத்திற்கும், தமிழுக்கும் அரும்பணி ஆற்றுகின்றவர்களையும் எமது நாட்டிலே காணக்கூடியதாக உள்ளது. அவர்களைப் போற்றுகின்றவர்களாகவும், அவர்களை பின்தொடர்பவர்களாகவும் நாங்கள் காணப்படுகின்றோம்.

வள்ளுவர் தனது திருக்குறளிலே அழகாக சொல்லி இருக்கிறார்

"பற்றுக பற்றற்றான் பற்றினை - அப்பறைப்
பற்றுக பற்று விடற்கு"

ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டியதில்லை, அப்படி ஒழித்துவிட்டால் வாழ்க்கையில் என்ன சுகம். அதனால்தான் தாமரை இலைத் தண்ணீர் போல் என்று போதித்தது இந்து மதம் என மதத்தின் சிறப்பைக் குறிப்பிட்டுள்ளார்.

சுவைக்கட்டியினும் இனித்திடும் தென்னமுதாய் இருக்கும் இந்துமதத்தின் தனி அழகே கோயில்கள் தான்.

" திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்

பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும்
பாங்கினொரு பல தளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்து இட்டு உண்ணாஊரும்
அவை எல்லாம் ஊர் அல்ல அடவிக்காடே.."

என்று திருநாவுக்கரசர் திருத்தாண்டக திருமுறையில் கோயில்களின் ஆத்மாந்த தனித்துவம் பக்தியோடு பரிந்துரைகப்படுகிறது என்பதை இத்தாண்டகத்திலே குறிப்பிட்டுள்ளார்.

" கற்றதனாலாய் பயன் என்சொல் லாலறிவான்
நற்றார் தொழா அர் எனின்" என்றும்

" பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேராதார்" என்றும் சமய சிந்தனையில் மறுமலர்ச்சி செய்து தமிழ் மணம் மிக்க இந்து சமயத்தை நிலைதவறிய காலத்திலும், வள்ளுவரும், சங்கமருவிய காலத்தில் ஔவையும் உண்மையான சமய வாழ்வு எது என்று காட்டி இந்து மதத்திற்காக மறுமலர்ச்சி செய்தார்கள்.

அன்புசார் பெருமக்களே! எமது சமயத்தை மேலும் எமது மண்ணிலே தலைசிறக்க வைக்கவேண்டும் என்றால் நாமும் இந்து மதத்தை நேசித்து, மேலும் முன்னேற்றகரமாக நடைமுறைப்படுத்தவும், பாதுகாக்கவும் வழிவகுப்போம்.

" மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

உசாத்துணை நூல்கள்:

இந்துப் பண்பாட்டியல்
திருக்குறள்
பெரிய புராணம்

**பாலஸங்கர் பாலசிவானுஜன்**
**2019 உயர்தரம், கலைத்துறை,**
**(மாணவ முதல்வன்)**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

# நவராத்திரி விரதம்

புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி முடிய வரும் ஒன்பது நாளும் கும்பத்திலே பூசைசெய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாம். இதில் வரும் அட்டமிக்கு மகா அட்டமி என்றும் நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். இதனால் இதை மகாநோன்பு அல்லது மகர்நோம்பு என்று சொல்லிக் கொண்டாடுவர். இது தேவி உபாசகர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் விரதமாகும். இந்த ஒன்பது இரவுகளினும், முதல் மூன்று நாட்களினும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களும் கல்வியை வேண்டிக் கலைமகளையும் நினைந்து பூசித்து விரதம் அனுட்டிப்பர். நோன்பு நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இவ்விரதம் அனுட்டிப்போர் முதல் எட்டுநாளும் ஒருபோது உணவு உட்கொண்டு, ஒன்பதாவது நாளான மகாநவமியில் உபவாசம் இருத்தல் உத்தமம். இந் நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி, குமரகுருபரரின் சகலகலாவல்லி மாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்யத்தக்கன.

| நாள் | இராகம் | பிரசாதம் | பழம் | புஷ்பம் | பத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1வது | தோடி | வெண்பொங்கல் சுண்டல் | வாழை | மல்லிகை | வில்வம் |
| 2வது | கல்யாணி | புளியோதரை | மா | முல்லை | துளசி |
| 3வது | காம்போதி | சக்கரைப் பொங்கல் | பலா | சம்பங்கி | மரு |
| 4வது | பைரவி | கறிச்சாதம் பொரியல் | கொய்யா | ஜாதிமல்லி | கதிர்ப் பச்சை |
| 5வது | பந்துவராளி | தயிர்ச்சாதம் | மாதுளை | பவளமல்லி | விபூதிப் பச்சை |
| 6வது | நீலாம்பரி | தேங்காய்ச்சாதம் | நாரத்தை | செம்பருத்தி | சந்தன இலை |
| 7வது | பிலகரி | எலுமிச்சம்பழம் | பேரீந்து | தாழம்பூ | தும்பை இலை |
| 8வது | புன்னாக வராளி | பாயாசம், முறுக்கு | திராட்சை | ரோஜா | பன்னீர் இலை |
| 9வது | வசந்தா | திரட்டுப்பால் | நாவல் | தாமரை | மருக் கொழுந்து |

# தீப வழிபாடு



## திருவிளக்கின் தகைமைகள்:

பூஜைக்கு ஏற்றப்படும் விளக்கு பித்தளை, செம்பு, வெள்ளி என்னும் உலோகங்களில் ஒன்றினால் அமைய வேண்டும். "எவர் சில்வர்" இரும்பினால் ஆனது பயன்படுத்தக்கூடாது. இரும்பில் விளக்கேற்றினால் தரித்திரம், வறுமை உண்டாகும். இன்று பெரும்பாலான வீடுகளில் துருப்பிடிக்காத இரும்பினால் (Staainless Steel) ஆன விளக்குகளையே பயன்படுத்துகின்றார்கள். இது தவிர்க்கப்படவேண்டியதாகும். பித்தளை விளக்குகளை வாங்குவதற்குப் பொருள் வசதியற்றவர்கள் மண் அகல்களைப் பயன்படுத்தலாம். அதில் தவறேதுமில்லை.

## திருவிளக்கின் பயன்


திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருக்க வேண்டும். ஐந்து சுடர்களையும் ஏற்றுவது சிறந்தது. நாள்தோறும் வழிபடும் வழிபாட்டில் ஒருமுகமே போதுமானது. தீபத்திற்குச் சிறந்தது நெய். நெய் விளக்கேற்றி வழிபட்டால் குலம் தழைக்கும். நல்லெண்ணெய் விளக்கு மகாலக்ஷ்மி, மகாவிஷ்ணு, சனீஸ்வரனுக்குச் சிறப்பானது. தேங்காய் எண்ணெய் விநாயகருக்குச் சிறப்பானது. இலுப்பை எண்ணெய் நெய்க்கு சமமானது.

பஞ்சினாலே திரியிடலாம். தாமரைத் தண்டின் நூலால் திரியிடல் மிகமிகச் சிறப்பானது.

விளக்கின் பாதத்தில் பூவைக்கலாம். அல்லது தண்டின் பாகத்திலே பூச்சரமிடலாம். திருவிளக்கின் மேல் பூவைத்தால், வெப்பத்தினால் கருக வாய்ப்புண்டு.

தற்பொழுது எல்லா விழாக்களிலும் "மங்கல விளக்கேற்றல்" என்ற ஒரு நிகழ்ச்சி கட்டாயமான ஒரு நிகழ்வாக ஆக்கப்பட்டுள்ளது. தேவையோ தேவையில்லையோ விளக்கேற்ற ஒரு பட்டியலே வாசிக்கப் படுகிறது. தீபம் ஏற்றும்போது பாதணிகளைக் கழற்றிவிட்டு ஏற்ற வேண்டும். மெழுகுவர்த்தியைப் பயன்படுத்துவதையும், தலைவிரி கோலமாக நின்று ஏற்றுவதையும் தவிர்த்தல் வேண்டும்.

# வணக்க முறைகள்



வணங்குதல் வடமொழியில் நமஸ்காரம் என்று அழைக்கப்படும். ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு, பணிவைக் காட்டுவதற்கு வணங்குதல் மிக முக்கியமாகும். இறைவன் சந்நிதானத்தில் கொடித் தம்பத்திற்கு முன்பாக விழுந்து வணங்குதல் வேண்டும். இது ஐந்து வகைப்படும்.

**ஏகாங்கம் :** தலையை மட்டும் தாழ்ந்து பணிந்து வணங்குதல், பெரியவர்களைக் கண்டால் இவ் ஏகாங்க வணக்கமே செய்ய வேண்டும்.

**துவியாங்கம்:** சிரசில் (தலையில்) வலக்கையை மட்டும் வைத்து வணங்குதல் (இது காவல் துறையின் சலூட் அடிப்பதைக் குறிக்கும்)

**திரியாங்கம்:** சிரசில் இருகைகளையும் குவித்து வணங்குதல், கோபுரத்தைக் கண்டதும் இவ்வணக்கம் செய்ய வேண்டும். (இம் மூன்றும் இருபாலரும் செய்யலாம்)

**பஞ்சாங்கம்:** தலை, இருகை, இரு முழந்தாள் எனும் ஐந்து உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குதல் (இது பெண்கள் மட்டும் செய்ய வேண்டும்)

**அஷ்டாங்கம்:** தலை, இருகை, இருசெவி, இருபுயம், மேவாய் எனும் எட்டு அங்கங்கள் பொருந்த வணங்குதல் (இது ஆண்களுக்கு மட்டும் உரியது)

இவற்றில் பஞ்சாங்க வணக்கமும், அட்டாங்க வணக்கமும், விரும்பத்தக்கது. வணங்கும் போது மேற்கு அல்லது தெற்கில் கால்களை நீட்ட வேண்டும். சங்கிராந்தி, பிற்பகல், சூரிய கிரகண நாளில் மேற்கில் கால்களை நீட்டுதல்கூடாது. கொடிமரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் எந்த இடத்திலும் விழுந்து வணங்குதல் கூடாது.

மும்மூர்த்திகளுக்கு சிரசின் மேல் 12 அங்குலம் உயர்த்தியும், ஏனைய தெய்வங்களுக்கு சிரசின்மேல் கூப்பியும் வணங்குதல் வேண்டும். பகல் 12 மணிக்கு மேல் சூரியன் மறைவதற்கு முன் அஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாகாது.

**பிரதட்சண பலன்**

பிரதக்ஷிணம் இறைவனை வலம்வருதல் எனப் பொருள்படும். கர்ப்பக்கிரகம் திறந்துள்ள போதே பிரதட்சணம் செய்யப்படல் வேண்டும். உட்பிரகாரப் பிரதட்சணத்தைவிட வெளிப்பிரகாரப் பிரதட்சணம் மும்மடங்கு நன்மையைத் தரும்.

**பிரதட்சணமும் எண்ணிக்கையும்**

| | | |
|---|---|---|
| விநாயகருக்கு | - | ஒரு முறை |
| சிவனுக்கு | - | மூன்று முறை |
| அம்மாள் | - | நான்கு முறை |
| ஏனைய தெய்வங்களுக்கு | - | மூன்று முறை |

**ஆலயத்தை வலம் வருவதால் ஏற்படும் பலன்கள்**

| | | |
|---|---|---|
| மூன்று முறை | - | விரும்பிய காரியம் நடைபெறும் |
| ஐந்து முறை | - | காரிய வெற்றி |
| ஏழு முறை | - | நல்ல குணம், எண்ணம், அமைதி |
| ஒன்பது முறை | - | ஆயுள் விருத்தி உண்டாகும் |
| பன்னிரண்டு முறை | - | உடல் வலிமை |

ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அடிமேல் அடி வைத்து அடிப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அங்கப் பிரதட்சணம் செய்யக்கூடாது. ஆண்கள் முட்டுக்காலில் நின்று வணங்குதல் கூடாது.

| | |
|---|---|
| காலையில் வலம் வருதல் | -நோய் நீக்கம் (முற்பிறவியில் செய்த பாவம் நீங்கும் |
| பகல் | - வேண்டிய வரம், தனம் பெருகும் (இரு பிறவிகளில் செய்த பாவம் நீங்கும்) |
| மாலை | - பாவ நீக்கம் (இப்பிறவியில் செய்த பாவம்) |
| அர்த்த சாமம் | - மோட்சம், வீடு பேறு என்பவற்றைத் தரும். |

**ஆறுகாலப் பூசைகளும் பலன்ககளும்**

| | | |
|---|---|---|
| உஷத்காலம்(அதிகாலை) | - | ஆண், பெண் பிள்ளைகள் இவர்களுக்குநன்மை |
| பிராதக்காலம் (காலை) | - | சுப, ஹோமாதி விருத்தி |
| மாத்யான்னிகம் (உச்சி) | - | அரசன், நாடு வளர்ச்சி |
| சாயங்காலம் (மாலை) | - | பயிர்த் தொழிலின் அபிவிருத்தி |
| பிற்பகல் | - | அரக்கர்கள் அழிவு |
| அர்த்தசாமம் (இரவு) | - | கால்நடைகளின் அபிவிருத்தி |

**அபிஷேக பலன்**

| | | |
|---|---|---|
| தைலாபிஷேகம் (எண்ணெய்) | - | சுகம் கொடுக்கும் |
| மாப்பொடி | - | கடனைப் போக்கும் |
| நெல்லி முள்ளிப்பொடி | - | வியாதியைப் போக்கும் |
| மஞ்சள் பொடி | - | வசீகரணம் உண்டாகும் |
| ஜலதிரவியம் | - | சௌபாக்கியம் தரும் |
| பஞ்சாமிர்தம் | - | புஷ்டி அளிக்கும் |
| நெய் | - | வெற்றியைத் தரும், மோட்சம் கிடைக்கும் |
| பால் | - | ஆயுள் பெருகும் |
| தயிர் | - | மக்கட் பேறு அளிக்கும் |
| தேன் | - | சுகமளிக்கும் |
| கரும்புச்சாறு | - | பிணி நீங்கும் |
| சர்க்கரை | - | பகையை அளிக்கும் |
| வாழைப்பழம் | - | பயிரை வளர்க்கும் |
| மாம்பழம் | - | சந்தானத்தை அளிக்கும் |
| மாதுளை | - | கோபத்தை நீக்கும் |
| நாரத்தை | - | நேர்மை அளிக்கும் |
| எலுமிச்சை | - | யம பயத்தை அளிக்கும் |
| அன்னம் | - | சாம்ராஜ்யம் தரும் |
| இளநீர் | - | போகம் அளிக்கும் |
| அன்னாபிஷேகம் | - | சாம்ராஜ்யமளிக்கும் |
| சந்தனம் | - | செல்வத்தை அளிக்கும் |
| கும்பம் | - | மோட்சம் |
| பத்ரோதகம் | - | பயத்தை நீக்கும் |
| சங்குஜம் | - | வெற்றி |
| சஹஸ்ரதாரை | - | செழிப்பு |

**ஷோடசோப சாரம் பலன்கள்**

| | | |
|---|---|---|
| ஆவாஹனம் | - | இறைவனை அழைத்தல் |
| ஆசனம் | - | இருக்கை கொடுத்தல் |
| பாத்யம் | - | திருவடிகளைக் கழுவ நீர் கொடுத்தல் |
| அர்க்யம் | - | மரியாதையைக் காட்ட நீர் கொடுத்தல் |
| ஆசமனம் | - | அருந்த நீர் கொடுத்தல் |
| மதுவர்க்கம் | - | பால், பழம் கொடுத்தல் |
| ஸ்நானம் | - | நீராடல் (அபிஷேகம்) |
| வஸ்திரம் | - | உடை கொடுத்தல் |
| யஞ்ஞோபவீதம் | - | பூணூல் போடுதல் |

| | | |
|---|---|---|
| கந்தகம் | - | வாசனைத் திரவியமளித்தல் |
| புஷ்பம் | - | மலர் தூர்த்துதல் |
| தூபம் | - | சாம்பிராணி காட்டுதல் |
| நைவேத்யம் | - | நிவேதனம் |
| தாம்பூலம் | - | வெற்றிலை பாக்கு தருதல் |
| நீராஞ்சனம் | - | கற்பூரம் காட்டுதல் |

**நைவேத்தியங்களும் பலன்களும்**

| | | |
|---|---|---|
| சர்க்கரைப் பொங்கல் | - | செல்வம் பெருகும் |
| பருப்புப் பொங்கல் | - | காரியசித்தி |
| புளி அன்னம் | - | வியாதி நிவர்த்தி |
| தேங்காய் அன்னம் | - | லக்ஷ்மிகரம் (செல்வம் பெருகும்) |
| எலுமிச்சம்பழம் அன்னம் | - | ரோகநாசம் (துன்பம் போகும்) |
| மிளகுச்சம்பா | - | வியாதி நிவர்த்தி (நோய் நீக்கம்) |
| கற்கண்டு அன்னம் | - | மங்களம் உண்டாகும் |
| பாயாசம் | - | தான்ய விருத்தி (பயிர் செழிப்பு) |
| வடை | - | ஆரோக்யம், சரீரபலம் |
| தயிர் அன்னம் | - | வியாதி நீக்கம் |
| பக்ஷணங்கள் | - | துன்பம் போகும் |
| பானகம் | - | காரியசித்தி |
| பால் அன்னம் | - | ராஜபோகம் |

**தீபஷோடசோபசாரமும் பலன்களும்**

| | | |
|---|---|---|
| தூபம் | - | உற்சாகத்தைத் தரும் |
| ஏகதீபம் | - | விழிப்பைத் தரும் |
| அலங்கார தீபம் | - | சாம்ராஜ்யத்தைத் தரும் |
| நாகதீபம் | - | லோகாதிபத்யம் தரும் |
| விருஷபதீபம் | - | அரசை அளிக்கும் |
| புருஷாமிருகதீபம் | - | அரச சித்திகள் |
| சூலதீபம் | - | வயிற்றுவலி நீங்கும் |
| ஆமைதீபம் | - | நீர்க்கண்டத்தைத் தடுக்கும் |
| கஜதீபம் | - | ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும் |
| சிம்மதீபம் | - | ஆயுளைக் கொடுக்கும் |
| வியாக்ரதீபம் | - | விலங்குகளிடத்தில் பயத்தைப் போக்கும் |
| கொடித்தீபம் | - | மங்கலத்தைத் தரும் |
| மயூரதீபம் (மயில்) | - | புத்திரப் பேறு அளிக்கும் |
| பஞ்ச தட்டுடன் பூர்ணகும்பம் | - | சாம்ராஜ்யமளிக்கும் |
| நக்ஷத்திர தீபம் | - | பாதுகாப்பு ஆதிபத்தியம் அளிக்கும் |
| மேருதீபம் | - | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும் |

# அன்றாடக் கிரியைகளில் சில நடைமுறைகள்

**கும்பம் வைத்தல்**

கடவுளைக் கும்பத்தில் வழிபடும்போது, கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகிறது. வாழையிலையை அதன் தலைப் பகுதியை வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக வைத்து அதில் நெல் அல்லது பச்சை அரிசி இட்டு, தண்ணீர் நிறைந்த குடம் வைத்து ஐந்து ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்கு மேல் தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலைமுடியாகவும், குடம் தசையாகவும், நூல் நாடிகளாகவும், பட்டு தோலாகவும், தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகிறது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.

**மாவிலை**

இது முக்கியமாக மங்களப் பொருளாகவும், தோரணமாகவும் கட்டப்படுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள் இல்லங்கள் திருமண வைபவங்களிலும் இம்மங்களப் பொருள் பயன்படுத்தப்படும். சகல வைபவங்களுக்கும் கும்பம் வைக்கும் பொழுது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது. மாவிலைத் தோரணம் அமைக்கும்போது மூன்று முறையாகப் பயன்படுத்தப்படும்.

**நற்காரியங்கள்:** ஆலயங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும் திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுபகாரியங்கள் நடைபெறும் போதும் மாவிலைத் தோரணம் இலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தித் தொங்கவிடுதல் வேண்டும். இது மாவிலை தலைகுனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும் (5 அல்லது 7 இலைகளைக் குத்தலாம்) இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும தகமையாகும்.

**கும்பம் வைக்கும் போது :** இது வீட்டில் மரணச் சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறையாகும். மாவிலையின் காம்பு நுனியை பின்பக்கமாக மடித்துக் குத்தி தொங்கவிடல் முறையாகும். இது அபரக் கிரியை முறைக்கு மட்டும் உரியதாகும்.


# 2018ம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்











**07.06.1939ம் ஆண்டு இந்துக்கல்லூரியினால் வெளியிடப்பட்ட ஔவையார் அருளிச் செய்த ஈசுரமாலை நூலை மீள் பதிப்பாக்கம் செய்து சிவதொண்டன் சபை பாதுகாத்து வருகிறது.**



II

நடையில் அமைந்திருக்கின்றது. இதனை முற்காலத்தில் ஆத்திசூடி கொன்றைவேந்தன் நமச்சிவாயமாலை முதலியவற்றுடன் ஆசிரியர்கள் மாணாக்கருக்கு நெட்டுருப் பாடமாகக் கற்பித்து வந்தனர். காலகதியில் இந்நூலைச் சிறுவருக்குப் பயிற்றும் முறை அருகலாயிற்று. நம் நாட்டிலே இதனைப்பற்றித் தற்காலத்திலே அறிந்தவர்கள் வயது முதிர்ந்த ஒரு சில பெரியோர்களேயாவர். இந்நூற்பிரதி இப்பொழுது கிடைப்பதரிது. சைவப் பிள்ளைகளுக்குப் பயன்படும் வண்ணம் மத்திய இந்துவாலிப சங்கத்தின் மூலம் இதனை வெளியிடுகின்றோம். சைவாபிமானிகள் இதனைப்பெற்றுப் படித்து இறைவன் அன்பைப் பெருக்கிக்கொள்வார்களாக.

மு. மயில்வாகனம்,
காரியதரிசி.
மத்திய இந்துவாலிப சங்கம்,
(இந்துக்கல்லூரியும், இணைப் பள்ளிக்கூடங்களும்.)

இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம். 7 - 6 - 39.

உ
கணபதி துணை

ஔவையார் அருளிச் செய்த

## ஈசுரமாலை

காப்பு

விரும்பித் தொழுவார் வினைதீர்க்க முக்கட்
கரும்பிற் பிறந்த களிறு.

அரும்பிய கொன்றை யணிந்த சென்னியன்
ஆறும் பிறையுஞ் சூடிய கடவுள்
இறையவன் மறையவ னிமையவர் தலைவன்
ஈசன் மழுப்படை யேந்திய கையன்
உம்பர் தலைவ னுயர்கயி லாயன்
ஊழி யூழி காலத் தொருவன்
எங்கள் நாயகன் கங்கை வேணியன்
ஏழுல காளி யிமையவர் தலைவன்
ஐங்கரத் தொருகோட் டானையை யீன்றவன்
ஒன்றே யுரு மொற்றி யூரன்

அபரக்கிரியைகளின் போது : இது வீட்டில் மரணச் சடங்கு நிகழும் போது அமைக்கப்படவேண்டிய முறையாகும். மாவிலையின் காம்பு நுனியை பின்பக்கமாக மடித்துக் குத்தித் தொங்கவிடல் முறையாகும். இது அபரபக்கக் கிரியைமுறைக்கு மட்டும் உரியதாகும்.

**வாழைமரம்**

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல் வேண்டும். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, காய், பழம், பூ, கனி என்பவை உணவாகவும், நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதேபோல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக்கூடிய நிலை வரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. இது வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும்முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழை மரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.

மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக்காட்டாக அமைகிறது. வாழைமரம் இலையில் பயன்படுத்தும்: கும்பம் வைக்கும் போது தலை நுனிப்பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இதுமட்டுமல்ல சாப்பிடும் போது தலை நுனி, இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலைநுனி தெற்குப் பக்கமாகப் போடுதல் வேண்டும்.

**தென்னந் தோரணம்**

தென்னங் குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப்பாக்கமாக இருக்கும்படியாக சுபகாரியங்களுக்கு அமைய வேண்டும்.

அபரக் கிரியைகளுக்கு மேற்பக்கமாக அமைய வேண்டும். தோரணத்தை வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

# ஆசார முறைகள்

எமது இந்து சமயத்திலே முதன்மை பெறுவது "ஆசாரம்". அதை நல்ல முறையில் பேணிக் காப்பது முக்கிய கடமையாகும். தினமும் சூரிய உதயத்தின் முன் கண்விழித்துக் காலைக்கடன்கள் முடித்து ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி தரித்து, சுகந்த சந்தனம் பூசி, இறை வழிபாடு செய்து புலால் தவிர்ந்த உணவு உட்கொண்டு உடற் சுத்தி, உளச்சுத்தியோடு இருப்பதே முறையான ஆசாரம். முக்கியமாக ஆலய வழிபாடு செய்யுங் காலங்களிலாவது இவற்றை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். தான் வாழும் இல்லத்தைக் கோயில் போல் ஆசாரமாக வைத்திருக்க வேண்டும். தீட்டுக்களுடன் வீட்டுக்குள் பிரவேசிப்பதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக ஒரு மரணச் சடங்கு வீட்டுக்குச் சென்றால், திரும்பி இல்லம் வந்ததும் முறைப்படி "ஸ்நானம்" செய்தே வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டும். காரணம் மரணச் சடங்கில் கண்ட துயரங்களும், அழுகை, துன்ப ஒலிகளும் மனம், வாக்கு, காயங்களில் பதிந்து நிற்கையில் "ஸ்நானம்" செய்து நித்திய அனுஷ்டானம் மூலம் மனம், வாக்கு, காயங்களைச் சுத்தமாக்கி செல்லுதல். அத்தோடு இறந்தவரிமிருந்து பிரேத கிருமிகள் தொற்றா வண்ணம் உடற்சுத்தம் முறையாகச் செய்ய வேண்டும்.

**சில முக்கிய ஆசார முறைகள்**

- கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது
- தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு. தனது இடது கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திரர் அழிவு, இடது கையால் சாப்பாடு போட்டுக்கொண்டால் செல்வம் அழியும், தனது இடது கையால் படுக்கை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.
- ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி முதலியவர்களுக்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப்பாக உதவவேண்டும்
- பசு, தேர், நெய்குடம், அரசு, வில்வம், அரசுடன் சேர்ந்த வேம்பு இவை கள் எதிரில் குறிக்கிட்டால், வலது புறம் சுற்றிச் செல்ல வேண்டும்.
- குடும்பஸ்தன் ஒரு துணியுடன் உணவு உட்கொள்ளக்கூடாது. ஒரு கையை தரையில் ஊன்றிக்கொண்டு சாப்பிடக்கூடாது. துணியில்லா மல் குளிக்கக்கூடாது. சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக்கூடாது.
- கன்றுக்குட்டியின் கயிற்றைத் தாண்டக்கூடாது. மழை பெய்யும்போது ஓடக்கூடாது. தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக்கூடாது.
- நெருப்பை வாயால் ஊதக்கூடாது.

- வானவில்லைப் பிறருக்குக் காட்டக்கூடாதது
- ஈரக் காலுடன் படுக்கக்கூடாது.
- வடக்கிலும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு எனும் திசைகளில் தலைவைத்துப் படுக்கக்கூடாது.
- பிணப்புகை, இளவெயில், தீப நிழல் இவை நம்மீது படக்கூடாது.
- நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக்கூடாது.

**உணவு பரிமாறும் முறைகள்**

- பரிமாறும் பொழுது வலமிருந்து இடமாக பரிமாறிக்கொண்டு வரவேண்டும். முதலில் இனிப்புப் பதார்த்தம் இலையின் இடப்புறம் அதாவது நாம் உட்காரும் போது எமது வலது கைப்பக்க ஓரத்தில் வைக்க வேண்டும்.
- பரிமாறும் போது உப்பு, நெய், சாதம் ஆகியவற்றை கையால் எடுத்துப் பரிமாறக்கூடாது.
- தலைவாழையிலை, உட்காரும்போது எமக்கு இடப்பக்கம் இலையின் தலைப்பக்கம் இருக்க வேண்டும்.
- தண்ணீர் வைக்காமல் உணவு பரிமாறக்கூடாது.
- வாழையிலையை மூடும்போது எமக்கு எதிரே உள்ள இலைக் கரையை எம்மை நோக்கியவாறு மடிக்க வேண்டும்.
- வாசல்படிக்கு நேரே அமர்ந்து உண்ணக்கூடாது.
- சாப்பிட்டபிறகு கையலம்புங்கள் என்று கூறித் தண்ணீர் கொடுக்க வேண்டும். கைகழுவுங்கள் என்று கூறக்கூடாது.
- சாப்பிடும்போது, முதலில் இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, கசப்பு, பதார்த்தங்களை வரிசையாக சாப்பிட்டு பின்பு நீர் அருந்த வேண்டும்.
- சாப்பிடும் போது தவிர மற்ற நேரத்தில் இடது கையால் தண்ணீர் அருந்தக்கூடாது.

**தலைக்குப் பூச்சூடுதல்**

பெண்கள் தினசரி ஏதாவதொரு பூவைத் தலையில் சூடிக்கொள்ள வேண்டும்

| | |
|---|---|
| ரோஜா மலர் | - பார்வைக்கு அழகைக் கொடுக்கும், நறுமணத்தைக் கொடுக்கும் |
| மல்லிகைப்பூ | - கண்பார்வையைக் குணமாக்கும் |
| செவ்வந்திப்பூ | - கூந்தல் வளரும், கண்ணுக்குக் குளிர்ச்சி |
| மகிழம்பூ | - தலைவலி, கண்நோய் நீக்கும். |
| சம்மங்கிப்பூ | - உஷ்ணத்தை ஏற்படுத்தும், வாயுத்தொல்லை நீங்கும் |

# திருக்கோயிலில் செய்யத்தகாதவை

- ஆடையால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல். இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும், பின் ஏழு பிறப்புக்களில் தரித்திரனாகவும் வாழ்வான் என நூல்கள் கூறுகின்றன.
- ஆசாரமில்லாது நடமாடுதல், விபூதி மற்றும் பிரசாதங்களை கீழே சிந்துதல்
- ஒரே முறை பிரகாரத்தில் வலம்வருதல்
- எச்சில் உமிழ்தல், மலசலம் கழித்தல்
- நித்திரை செய்தல், கால்களை நீட்டிக்கொண்டிருத்தல்.
- மயிர் கோதி முடிதல், சூதாடுதல்
- பாதரட்சை இட்டுக்கொள்ளுதல்
- வீண்வார்த்தை பேசுதல், பொய்பேசுதல், இரைந்து சிரித்தல்
- பிறரைத் துன்புறுத்தல், விளையாடுதல்
- சுவாமிக்கும் பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்
- அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், வலம்வருதல்
- திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டாதிருத்தல்
- காம எண்ணங்கொள்ளல்
- கம்பளி ஆடை அணிதல்
- இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல், தாம்பூலம் தரித்தல், புகைத்தல்
- விக்கிரகத்தை தொடுதல்
- தூபி, துவஜஸ்தம்பம் (கொடிமரம்), பலிபீடம், இடபம், விக்கிரகம் முதலியவற்றின் நிழலை மிதித்தல்
- உற்சவம் கொண்டருளும் போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல்
- வழிபடுவோருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளல்

**உசாத்துணை - இந்துமக்களுக்கு ஒரு கையேடு**

# இந்து இளைஞர் கழகத்தின் ஊடாக சிவஞானவைரவப் பெருமானின் சங்காபிஷேகத்திற்கு நிதி அன்பளிப்புச் செய்த அடியார்களின் விபரம்

## 2018

| | | |
|---|---|---|
| 01. | தே. ஜெயக்குமார் | 2000.00 |
| 02. | கணேசலிங்கம் | 1000.00 |
| 03. | S. மயூரன் | 1000.00 |
| 04. | திருமதி பிரதீபா | 1000.00 |
| 05. | திரு. செந்தில்குமார் | 300.00 |
| 06. | திரு. தவகுலசிங்கம் | 1000.00 |
| 07. | திரு. த. நிஷாந்தன் | 1000.00 |
| 08. | திரு. பகீரதன் | 2000.00 |
| 09. | திரு. சி. சஜீப் | 1000.00 |
| 10. | திரு. இ. ரகுபதி | 1000.00 |
| 11. | திருமதி சா. சுந்தரேஸ்வரன் | 1000.00 |
| 12. | திரு. ரூபசீலன் | 1000.00 |
| 13. | திரு. சிவராஜா | 5000.00 |
| 14. | திரு. இ. பாலச்சந்திரன் | 5000.00 |
| 15. | திருமதி ம. செல்வரட்ணம் | 1000.00 |
| 16. | திருமதி செந்தில்ராஜா | 5000.00 |
| 17. | திருமதி வாகீஸ்வரன் | 500.00 |
| 18. | திருமதி த. முரளீதரன் | 500.00 |
| 19. | திருமதி ம. விக்னேஸ்வரன் | 300.00 |
| 20. | செல்வி தாட்சாயினி | 300.00 |
| 21 | திரு. சரவணபவன் | 500.00 |
| 22. | திருமதி லோ. மதியமுதன் | 500.00 |
| 23. | திரு. விஜிதரன் | 500.00 |
| 24. | திரு. யதுர்சன் | 500.00 |
| 25. | திருமதி கௌ. கந்தராஜ் | 500.00 |
| 26. | திரு. வி.ஜெனகன் | 1000.00 |
| 27. | திரு. ந. சிவச்சந்திரன் | 500.00 |
| 28. | திரு. கரன் (கன்ரின்) | 100.00 |
| 29. | திரு. இ. தினேஸ் (கன்ரின்) | 200.00 |
| 30. | நேரு போட்டோ | 200.00 |

| | | |
|---|---|---|
| 31. | திருமதி கு. செந்தூரன் | 1000.00 |
| 32. | திரு. தயானந்தன் | 1000.00 |
| 33. | திரு. க. செந்தில்ரூபன் | 2000.00 |
| 34. | திருமதி கவிதா வாமதேவன் | 500.00 |
| 35. | திரு. ப. ரகுமார் | 10,000.00 |
| 36. | செல்வி கீர்த்திகா | 500.00 |
| 37. | திருமதி அனுசீலா | 1000.00 |
| 38. | திரு. மகேந்திரன் | 500.00 |
| 39. | திருமதி லிங்கேஸ்வரி | 500.00 |
| 40. | திருமதி விக்னரூபன் | 500.00 |
| 41. | திரு. ஸ்ரீகுமார் | 500.00 |
| 42. | திரு. ஸ்ரீரங்கநாதன் | 1000.00 |
| 43. | திரு. ந. விபுலன் | 1000.00 |
| 44. | செல்வன் சி. கஜவதனன் | 200.00 |
| 45. | திரு. S. நகுலராஜா | 1000.00 |
| 46. | திரு. கிருஷ்ணகுமார் | 500.00 |

## பொருள் அன்பளிப்புச் செய்தோர் விபரம்

01. திரு. ல. நிசாந்தன்
02. திரு. சு. பரமேஸ்வரன்
03. திரு. மகேந்திரன்
04. திரு. க. சுவாமிநாதன்
05. திரு. ஸ்ரீகுமார்
06. திரு . ச. அகிலன்

## பங்களிப்பு

**யாழ் இந்துக் கல்லூரியின் மாணவர் பாராளுமன்றத்தின் இந்து கலாச்சார அமைச்சு இந்து இளைஞர் கழகத்துடன் இணைந்து நவராத்திரி விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகங்கள், பொறுப்பாசிரியர், அமைச்சர், பிரதியமைச்சர், உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கியமைக்கு கழகம் சார்பான மனப்பூர்வமான நன்றிகள்.**

# சொற்பொழிவாளர்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்து இளைஞர் கழகத்தின் அழைப்பின் பெயரில் எமது சமய நிகழ்வுகளுக்கு சொற்பொழிவு நிகழ்த்திய பெரியோர்கள் அனைவருக்கும் எமது கல்லூரி சார்பாகவும், கழகத்தின் சார்பாகவும் என்றென்றும் நன்றியுடையவர்கள்

திரு. சஜீவன் - (நாவுக்கரசர் குருபூசை)
- பழைய மாணவன்
சின்மய சுவாமிகள்
திரு. அனந்த இராம கிருஷ்ணன்
- இந்திய இசைப் பேராசிரியர்
திரு. பாலகைலாசநாதசர்மா - (மாணிக்கவாசகர் குருபூசை)
- விரிவுரையாளர்
திரு. பாலசண்முகன் - (திருஞான சம்பந்தர் குருபூசை)
- விரிவுரையாளர், பழைய மாணவன்
திருவாவடுதுறை ஆதின சுவாமிகள்

## போட்டிகள்

நவராத்திரி விழாவை முன்னிட்டு யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்து இளைஞர் கழகத்தினால் நாவண்மைப் போட்டி (தங்கப்பதக்கம்), கோலப்போட்டி, மாலை கட்டும் போட்டி, சகலகலாவல்லிமாலை போட்டி மேற்படி போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு நடைபெற்று சான்றிதழ்கள் நவராத்திரி இறுதி விழாவில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேற்படி போட்டியைத் திறம்பட நடாத்த ஒத்துழைத்த கல்லூரி ஆசிரியர்களுக்கும் நடுவர்களாகக் கடமையாற்றிய கல்லூரி ஆசிரியர்களுக்கும் இந்து இளைஞர் கழகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**திரு. சண்முகானந்தன் (ராஜா கிறீம் கவுஸ்), திரு. குணசீலன் (மின்பொறியியலாளர் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம்) ஆகியவர்கள் நவமலருக்கான ஒரு பகுதி அன்பளிப்பை தந்துதவியமைக்கு கழகம் சார்பான மனப்பூர்வமான நன்றிகள்.**

# யாழ் இந்துவின் நவமலர் மணங் கமழப் பங்களித்த உங்களுக்கு கழகத்தின் உள்ளங்கனிந்த நன்றிகள்

2018ஆம் ஆண்டின் நவமலருக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகள் வழங்கிய சிவஞான வைரவப் பெருமான் ஆலய சிவாச்சாரியாருக்கும், பெரியார்களுக்கும், இந்து இளைஞர் கழகத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வளமான வாழ்வுக்கும் உறுதுணையாக உள்ள அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கல்விசாரா ஊழியர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும், நவராத்திரி போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு புத்தகங்களை அன்பளிப்பு செய்த சிவதொண்டர் சபை நிலையத்தாருக்கும், நவமலரை குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு தந்துதவிய போஸ்கோ அச்சகத்தினருக்கும், இன்னும் பல வழிகளிலும் நவமலரின் வரவுக்கு பங்களித்த அன்புள்ளங்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்துக் கல்லூரியின் சிவஞானவைரவப் பெருமானின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன் தாள் பணிகின்றோம்.

**இந்து இளைஞர் கழகம்**
**19.10.2018**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.



**சுபம்**

# கல்லூரி கீதம்

வாழிய யாழ் நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்


கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலை நிமிர் கழகமும் இதுவே!


எவ்விடம் மேகினும் எத்துயர் நேரினும்
எம்மண்ணை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றுமே
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே
ஓங்குநல்லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒரு பெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரென கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.


யோகர் சுவாமிகள்


செல்லப்பா சுவாமிகள்


குடைச் சாமியார்